**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 130 of 2024

DATE : 08.07.2025

Depositions of witness for Prosecution

PW :6

| | | | |
|---|---|---|---|
| Name | முனீஸ்வரன் | Caste | |
| Father/Husband's Name | வேலுச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of July 2025

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை : -**

நான் துலுக்கப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிஷன் ஆக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 19.09.2021 ஆம் தேதி மாலை 6 மணி அளவில் நான் எனது வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தேன். சுமார் ஏழு மணி அளவில் குன்னூர் செல்லும் சாலையில் ஈஸ்வரன் காட்டுக்கு அருகில் போலீசார்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் அதில் நானும் தங்கேஸ்வரன் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : -**

சாட்சி ஈஸ்வரன் எனது உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். முத்துமாரி எனது அண்ணனின் மனைவி என்றால் சரிதான். சாட்சி சுப்பையா எனது சித்தப்பா ஆவார். லங்கேஸ்வரன் எனது மைத்துனர் ஆவார். எங்களது குடும்பத்திற்கும் ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் பாதை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் உறவு முறை குறித்து எங்களுக்குள் இருந்து வரும் பிரச்சனை குறித்தோ சொல்லவில்லை என்றால் பதற்றத்தில் சொல்லவில்லை. போலீசார் என்னிடம் கையெழுத்து மட்டும் தான் வாங்கினார்கள் அதில் என்ன இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை. புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் யார் தயார் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் பாதை சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருவதால் ஆஜர் எதிரிக்கு எதிராக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : - இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு